<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>

<u>O.S. 150/2024</u>

14.11.2025 வ.சா.1 திரு. பாலமுருகன்

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. தங்கம்மாளிடம் அவர் இறக்கும் காலம் வரை நான் அவரிடம் பாட்டம் செலுத்தியத்திற்கு ரசீதை கேட்பேனா என்றால் கேட்பேன் ஆனால் தர மாட்டார். நான் பாட்ட பணத்தை ரொக்கமாக செலுத்துவேனா என்றால் நேரடியாக பணமாக தான் கொடுப்பேன். நான் இந்த வழக்கு மற்றும் அ.வ,எண். 496/2021 எதிர்வழக்குரையிலோ கட்டுகுத்தகை சம்சாரியாக தபசில் சொத்தில் இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கட்டுகுத்தகை சம்சாரி என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் வைத்துள்ளேனா என்றால் கிராம நிர்வாக அலுவலர் கட்டுகுத்தகை சம்சாரி என அடங்கல் கொடுத்துள்ளார். மேற்படி அடங்கல் எந்த வருடம் வழங்கப்பட்டது என்றால் 2018 முதல் 2020 வரை வழங்கப்பட்டது. எனக்கு வழங்கப்பட்ட அடங்கலில் சொத்தின் உரிமையாளர் என கணேசன் என்பவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை தங்கம்மாள் என்பவர் பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது.
2. எனக்கு வழங்கப்பட்டதாக சொல்லும் அடங்கலை நான் இந்த வழக்கு மற்றும் அவஎண். 496/2021ல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் ஆனால் கைவசம் வைத்துள்ளேன். நான் சொல்வது போல் தாவா சொத்தை பொறுத்து நான் கட்டுகுத்தகை சம்சாரி என்று எனக்கு எந்த அடங்கலும் வழக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 1959ம் வருடம் அழகுமுத்து உயில் எழுதி வைத்துள்ளதாகவும், மேற்படி உயில் அடிப்படையில் எனது தந்தை, கணேசன், சுப்பையா

ஆகிய மூவருக்கு தலா 1 பாகம் என பிவாசாஆ 2 ஆன எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

3. மேற்படி உயில் ஆவணத்தை இந்த வழக்கிலே அல்லது அவஎண். 496/2021க்கு தாக்கல் செய்யாததற்கு காரணம் எதுவும் உண்டா என்றால் காரணம் இல்லை ஆனால் நான் வைத்துள்ளேன். எனது கட்சி படி உயிலின் அடிப்படையில் எனது தந்தை, கணேசன், சுப்பையா ஆகியோருக்கு மட்டும் தான் தபசில் சொத்து பாத்தியம் என்றும் தங்கம்மாளுக்கு பாத்தியம் இல்லை என்று நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தங்கம்மாள் என்பவருக்கு தான் தபசில் சொத்து பாத்தியப்பட்டது.

4. தங்கம்மாள் வாரிசு அடிப்படையில் எனக்கு தாவா சொத்தில் 3 ல் 1 பாகம் என்று கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் மேலே சொன்ன உயில் படி சொத்தில் உரிமை கோருகிறேனா அல்லது தங்கம்மாளின் வாரிசு என்ற அடிப்படையில் உரிமை கோருகிறோனா அல்லது அனுபவத்தின் அடிப்படையில் தபசில் சொத்தை பொறுத்து உரிமை கோருகிறேனா என்றால் உயில் அடிப்படையில் தான் உரிமை கோருகிறேன். நான் இந்த வழக்கின் வழக்குரையில் எந்த இடத்திலும் உயில் அடிப்படையில் உரிமை கோருகிறேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிராது பாரா 11 ல் சொல்லியுள்ளேன்.

5. தங்கம்மாள், கணேசனுக்கு உயில் எழுதி வைத்தையோ, கிரையம் கொடுத்ததையோ என்னை தவிர என் தகப்பனார் உடன் பிறந்தவர்கள் எந்தவிதமான ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். தங்கம்மாள் இறக்கும் காலம் வரை எங்களுடன் குடியிருக்கவில்லை என்றால் சரிதான் தனியாக தான் இருந்தார். தங்கம்மாள் இறப்பதற்கு 4 வருடங்களுக்கு முன்பு எனது தந்தை இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

6. தாவா சொத்தை பொறுத்து எனது தந்தை பெயரில் உரிமை மற்றும் அனுபவம் சம்பந்தமாக ஆவணம் இல்லை என்றால் தற்போது கைவசம் இல்லை ஆனால் வங்கியில் உள்ளது. தாவா சொத்தில் எனது உரிமையை காட்டக்கூடிய ஆவணம் இல்லை என்றால் தற்போது இல்லை ஆனால் வைத்துள்ளேன். தங்கம்மாள் மனநிலை சரியில்லாததாகவோ அல்லது உடல்நிலை சரியில்லாமல் போனதற்கோ எனக்கு தெரிய சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. தங்கம்மாளுக்கு மனநிலை எப்போது சரியாக தான் இருந்தது என்றால் இறப்பதற்கு 5 வருடம் முன்பு வரை மனநிலை சற்று சரியில்லாமல் இருந்தார். மேற்படி மனநிலை சரியில்லாமல் இருந்தாக நான் சொல்வதற்கான சங்கதியை ஆவணங்கள் மூலம் நிருபிக்கமுடியுமா என்றால் முடியாது.

7. நான் வேண்டுமென்றே பிவாசாஆ 1 கிரைய ஆவணம் என் பெயருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட காலத்தில் தங்கம்மாள் நல்ல மனநிலையில் இருந்ததாகவும் 1–ம் பிரதிவாதி பெயருக்கு உயில் மற்றும் கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்த காலத்தில் தங்கம்மாள் மனநிலை சரியில்லாமல் இருந்ததாக பொய் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. தங்கம்மாள் எழுதிக் கொடுத்த உயில் ஆவணமும், வாசஆ 9 கிரைய ஆவணமும், தங்கம்மாளின் முழுமையான சம்மதத்தின் பெயரில் அவர் அறிந்து புரிந்தும் எழுதிக் கொடுத்த ஆவணங்கள் ஆகும் என்றும் எனக்கு தாவா சொத்தில் சட்டப்படியான உரிமை இல்லாததால் எனக்கு மேற்படி ஆவணங்களை ஆட்சேபிக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல.

8. கணேசன் பெயருக்கு 1வது தபசில் சொத்தை பொறுத்து தங்கம்மாள் எழுதிக் கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அவஎண்.496/2021 வழக்கிற்கு பின்னர் தான் எனக்கு மேற்படி விவரம் தெரியும். மேற்படி

விவரம் தெரிந்த பின்னர் வருவாய் துறையினரிடம் ஆட்சேபணை எதுவும் செய்தேனா என்றால் பட்டா சம்பந்தமாக ஆட்சேபணை செய்து மனு கொடுக்கவில்லை. மேற்படி பட்டா அடிப்படையில் தபசில் சொத்திற்கு கணேசன் தீர்வை செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்திற்கு எந்த காலத்திலும் தீர்வை செலுத்தியது கிடையாது என்றால் சரிதான்.

9. வாசாஆ.2 ஆவணமானது சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ 3 அறிவிப்பு மூலம் தங்கம்மாள் அனுமதியின் பெயரில் தபசில் சொத்தை அனுபவிக்க கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான் 20 ஆண்டுகளுக்கு முன்பு பயிர் செய்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. அனுமதியின் பெயரில் கொடுக்கப்பட்ட சொத்திற்கு தான் தங்கம்மாள் இறக்கும் காலம் வரை கட்டுகுத்தகை பாட்டம் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான்.

10. எனக்கு தாவா சொத்தில் எந்த காலத்திலும் உரிமையும் அனுபவம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரம் காலம் கடந்து கேட்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தங்கம்மாளிடம் இருந்து வேறு சொத்துகளை கிரையம் பெற்ற நான் பிரதிவாதியிடம் தபசில் சொத்தை அபகரிக்க வேண்டும் என்று பொய்யான காரணங்களை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 14.11.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.11.14 16:55:47 +0530

Principal District Munsif,
Tirunelveli.